**JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU**

**CC No.472/2010**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 19 |
| Name | : Tr. Subramani |
| Father's Name | : Vaikundam |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.04.2022.

**முதல் விசாரணை.**

நான் கிளை மேலாளராக தும்மல் என்ற இந்தியன் பேங்க் கிளையில் கிளை மேலாளராக இருந்து ஓய்வு பெற்றேன். நான் 2009 ல் இந்தியன் வங்கி, ஆத்தூர் கிளையில் உதவி கிளை மேலாளராக பணி செய்து வந்தேன். அப்போது போலிசார் என்னிடம் மகாலட்சுமி என்பரின் பேங்க் ஸ்டேட்மெண்டை என்னுடைய மேலாளர் குலோத்துங்கன் என்பவரிடம் கேட்டிருந்தனர். அன்றைய தினம் குலோத்துங்கன் விடுப்பில் இருந்ததால் நான் அந்த ஸ்டேட்மெண்ட்டை அன்றைய பொறுப்பிலிருந்து கொடுத்தேன். என் முன்பு காட்டப்படும் மகாலட்சுமியின் வங்கி கணக்கில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அவரின் கணவர் பெயர் அழகப்பன். இந்த வங்கி கணக்கின் தொகையை ஏற்கனவே இந்தியன் வங்கி கிளை மேலாளரால் குறியீடு செய்யப்பட்டதாகும். **அந்த வங்கியின் ஸ்டேட்மெண்டானது அதசாஆ 18 ஆகும்.** நான் கொடுத்த மேற்படி ஆவணத்தில் கையொப்பம் செய்த தேதியை ஆவணத்தை பார்த்தால் கூறமுடியும். அந்த பேங்க் ஸ்டேட்மெண்டை கோப்பை பார்த்து 25.06.2009 அன்று வழங்கினேன். போலிசார் இது சம்மந்தமாக என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.**

போலிசார் என்னை மகாலட்சுமியின் வங்கி கணக்கு பெறவேண்டி கடிதம் கொடுத்ததன் பேரில் நான் கொடுத்தேன். அந்த வேண்டுகோள் கடிதத்தை நான் விசாரணையின் போது கொடுத்து அது நீதிமன்றத்தில்

தாக்கல் செய்யப்பட்டுள்ளது. போலிசார் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தின் தேதியை ஆவணத்தை பார்த்தால் கூற முடியும். மேற்படி வேண்டுகோள் கடிதத்தில் 20.06.2009 என்பதை 25.06.2009 என திருத்தம் மேற்கொள்ளபட்டுள்ளது என்றால் சரிதான். என் முன்பு காட்டப்படும் ஸ்டேட்மெண்ட் அக்கவுண்டில் பணம் செலுத்தியவரின் பெயர் உள்ளதா என்றால் இல்லை. செலானில் தான் குறிப்பிடுவார்கள். ஓரிஜினல் செலான் விசாரணையின் போது போலிசாரிடம் கொடுக்கப்பட்டதா என்றால் கேட்ட ஆவணங்களை கொடுத்தோம். செலான் கொடுத்தோமா இல்லையா என்று தெரியவில்லை. என்னிடம் காட்டப்படும் ஸ்டேட்மெண்ட் அக்கவுண்டில் ஒவ்வொரு பக்கத்திலும் முத்திரை மற்றும் என்னுடைய கையொப்பம் உள்ளதா என்றால் கடைசி பக்கத்தில் மட்டும் போட்டால் போதும் என்பதால் போட்டேன். கடைசி பக்கத்தில் கையொப்பம் செய்துள்ளேன் ஆனால் என்னுடைய முழு பெயரையும் எழுதவில்லை. அவசியம் இல்லை என்பதால் குறிப்பிடவில்லை. நான் மகாலட்சுமியின் வங்கி கணக்கு விவரங்களை போலிசாரிடம் கொடுப்பதற்கு முன்பு மகாலட்சுமியிடம் அனுமதி பெறவில்லை. போலிசார் நான் ஸ்டேட்மெண்டை கொடுத்த அன்று விசாரித்தனர். வங்கி கணக்கு கொடுத்து 6 மாதம் கழித்து தான் என்னை விசாரித்தனர் என்றால் சரியல்ல. நான் போலிசார் கேட்டு கொண்டதன் பேரில் பொய்யான விவரங்களை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை.** இல்லை.

Sd/(xxxx)

Typewritten to my dictation in open
court read over to the witness in tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.

Sd. xxxx
Judicial Magistrate No.I,
Chengalpattu.